கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாமக்கல்.
முன்னிலை திருமதி M.பிரவீணா. M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, நாமக்கல்

**2025ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ம் நாள் வெள்ளிக்கிழமை**

REP.No.53/2022 in HRCOP.No.7/2010

ஸ்ரீவிநாயகர் பைனான்ஸ், நாமக்கல்
அதன் மேனேஜிங் பார்ட்னர் N.K.நடராஜன் ....மனுதாரர்/ உரிமையாளர்

/எதிராக/

1. K.பாலசுப்ரமணியம்
2. K.ராஜசேகர்
3. K.அருணாச்சலம்
4. R.கமலம்
5. K.உண்ணாமலை ...எதிர்மனுதாரர்கள்/வாடகைதாரர்கள்

இம்மனு என் முன்பாக 10.02.2025ம் தேதி இறுதி விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.V.ரகு, M.Com., B.L., அவர்களும், 1, 2, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.சந்திரசேகரன், M.Sc., B.L., அவர்களும், 5ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.முத்துவேல், B.L., அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் போதிய வாய்ப்பு கொடுத்தும் பதிலுரை தாக்கல் செய்யாத காரணத்தினால் மேற்படியாருக்கு எதிராக 03.10.2023 தேதியில் ஒருதலைபட்ச உத்வரானது இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டும், இருதரப்பு வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும்

**உத்தரவு**

எதிர்மனுதாரர்கள் வசம் இருக்கும் மனுவில் கண்ட சொத்துக்களை எதிர்மனுதாரர்கள் சுவாதீனம் கொடுக்க அறிவிப்பு அனுப்பியும், தவறினால் நீதிமன்ற அமீனா மூலம் சுவாதீனம் செய்து கொடுக்க உத்தரவு பிறப்பிக்க வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 11, 22, 35ன்படி மனு தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

**2.மனுவின் சுருக்கம்**

இம்மனு பிரமாணதாரர் மனுதாரர் நிறுவனத்தின் நிர்வாக பங்குதாரர் என்றும், மனு குறித்த பொருண்மைகள் மேற்படியாருக்கு நன்கு தெரியும் என்றும், மனுதாரர் நிறுவனமானது 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் அவர்களது சகோதரர் லேட்.கருப்பையா என்பவரின் மகன் ராமநாதன் ஆகியோருக்கு எதிராக மனு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கும் பொருட்டு மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுவானது 01.12.2011 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மேற்படி உத்தரவுக்கு எதிராக திருச்செங்கோடு சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.RCA.No.1/2014 தாக்கல் செய்திருந்ததாகவும், மேற்படி மேல்முறையீடானது அனுமதிக்கப்பட்டதாகவும், RCA.No.1/2014 பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP.No.3184/2014ஐ 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் மேற்படி ராமநாதன் தாக்கல் செய்து மேற்படி மனுவானது சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மேற்படி CRP.No.3184/2014 நிலுவையில் இருந்த போது கே.ராமநாதன் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதால், மேற்படியாரின் வாரிசுகளான அவரது மனைவி ஆர்.கமலம் மற்றும் அவரது தாயார் கே.உண்ணாமலை ஆகியோர்கள் மனுவில் தரப்பினராக சேர்க்கப்பட்டதாகவும், மேற்படி உண்ணாமலை தனது மக்களான 1 முதல் 3 எதிர்மனுதாரர்களை விட்டு காலமாகிவிட்டதாகவும், இம்மனு மனுதாரர்கள் மனு சொத்தின் சுவாதீனத்தை வழங்கும் பொருட்டு இந்நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளதாகவும், நீதிமன்றம் உத்தரவிட்டும் கூட எதிர்மனுதாரர்கள் மனு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கவில்லை என்றும், ஆகவே நீதிமன்ற அமீனா மூலம் மனு சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்குமாறு இம்மனு தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**3.1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையை 2, 4 எதிர்மனுதாரர்களால் அனுசரிக்கப்படுகிறது.**

மனுதாரர் பொய்யான சங்கதிகளை கூறி இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், 1ம்

எதிர்மனுதாரர் வகையறா மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் CRP.No.3184/2014ல் பிறப்பித்த 08.06.2020 தேதியிட்ட உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் சிறப்பு மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரும் மனு தாக்கல் செய்ததாகவும், மேற்படி மனு தாக்கல் செய்த விவரம் நன்கு தெரிந்தே அவசர கதியில் மனுதாரர் மேற்படி நிறைவேற்று மனுவை தாக்கல் செய்ததாகவும், மேற்படி நிறைவேற்று மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி நிறைவேற்று மனு நிலுவையில் இருந்த சமயம் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மனுதாரரின் சிறப்பு அனுமதி கோரும் மனுவினை தள்ளுபடி செய்துள்ளதாகவும், அவ்வாறு மனு தள்ளுபடி செய்யப்பட்ட போது எதிர்மனுதாரர் வகையறா நடத்தி வரும் வியாபார நிறுவனமான ஜவுளி கடையை மனுதாரருக்கு காலி செய்து கொடுப்பதற்கு குறைந்தது 6 மாதம் முதல் 1 வருடம் வரை கால அவகாசம் வழங்கி மனு தள்ளுபடி செய்யப்பட்டால் தான் அந்த கால அவகாசத்தில் எதிர்மனுதாரர்கள் வகையறா வெளியில் கடன் கொடுத்தவரிடம் கடனை வசூல் செய்து கடையில் இருக்கக்கூடிய இருப்பு வகையறாக்களை காலி செய்து கடையை ஒப்படைக்க இயலும் என்றும், பொதுவாகவும், நடைமுறையிலும், RCOP சம்பந்தப்படட வழக்குகளில் உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம், மேல்முறையீட்டு வழக்குகளை தள்ளுபடி செய்யும் போது குடியிருப்பு வீடாக இருந்ததால் 3 முதல் 6 மாதங்களும் வியாபார நிறுவனங்களுக்கு 6 மாதம் முதல் 1 வருடம் காலம் வரை இடத்தை காலி செய்வதற்கும் அவகாசம் அளிப்பார்கள் என இம்மனு எதிர்மனுதாரர்கள் அவரது கீழமை நீதிமன்ற வழக்கறிஞரால் அறிவுறுத்தப்பட்டதாகவும், அந்தப்படிக்கு இம்மனு எதிர்மனுதாரரும் சென்னை வழக்கறிஞரை தொடர்பு கொண்டதற்கு சென்னை வழக்கறிஞர், உச்சநீதிமன்ற வழக்கறிஞரை தொடர்பு கொண்டு SLP மனுவில் review அல்லது curative மனு தாக்கல் செய்ய கேட்டுக்கொண்டதாகவும், அந்தபடிக்கு உரிய மனு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய இம்மனு எதிர்மனுதாரரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மேற்படி மனுவில் இம்மனு எதிர்மனுதாரருக்கு மனு சொத்தை காலி செய்ய அவகாசம் வழங்க அதிகப்படியான வாய்ப்புள்ளதாகவும், இச்சூழ்நிலையில் இந்நிறைவேற்று மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் எதிர்மனுதாரர் வகையறாவுக்கு கஷ்டம் ஏற்படும் என்றும், மனுவிற்கு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும், உரிய

தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றும், ஆகவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**4.5ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையின் சுருக்கம்.**

மனுதாரர் பொய்யான சங்கதிகளை கூறி இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும், HRCOP 7/2010 அசல் மனுவிலும், உத்தரவாணையிலும் மற்றும் RCA 1/2014 உத்தரவிலும், 2ம் எதிர்மனுதாரராக சேர்க்கப்பட்டிருந்த கே.ராமநாதன் நிறைவேற்று மனுவில் (53/2022) தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும், ஆனால் நிறைவேற்று மனுவில் 2ம் எதிர்மனுதாரராக கே.ராஜசேகர் என்பவர் சேர்க்கப்பட்டு மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவானது உரிய நபரை சேர்க்காத காரணத்தினால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், HRCOP 7/2010 அசல் மனுவிலும், உத்தரவாணையிலும் மற்றும் RCA 1/2014ல் ஏற்பட்ட உத்தரவினை எதிர்த்து சென்னை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் CRP 3184/2014 சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த போது 12.05.2019ம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், 08.06.2020 தேதியன்று மேற்படி சீராய்வு மனு 3184/2014 மனு தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், அதன் பிறகு மனுதாரர்கள் இந்நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் நிறைவேற்று மனுவில் இறந்துபோன 2ம் எதிர்மனுதாரர் கே.ராமநாதனை தரப்பினராக காண்பிக்காமலும், அவருடைய வாரிசுகளான மனைவி கமலம் என்பவரை 4ம் எதிர்மனுதாரராகவும், தாயார் உண்ணாமலையை 5ம் எதிர்மனுதாரராகவும் காண்பித்தும், உரிமையில் நடைமுறை சட்டப்படி இறந்துபோன 2ம் எதிர்மனுதாரர் கே.ராமநாதனுக்கு வாரிசுகள் சேர்ப்பதற்கு உரிய மனு தாக்கல் செய்து நீதிமன்ற அனுமதி பெறாமுலம், 4, 5 எதிர்மனுதாரர்களை தன்னிச்சையாக தரப்பினராக காண்பித்து தாக்கல் செய்துள்ள இந்நிறைவேற்று மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும், மனுதாரர்கள், நிறைவேற்று மனுவில் இறந்துபோன 2ம் எதிர்மனுதாரர் கே.ராமநாதனை, 2ம் எதிர்மனுதாரராக காண்பிக்காமலும் மற்றும் இறந்துவிட்டார் என்று காண்பிக்காமலும் சட்டமுறையற்ற வகையில் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே நீக்கரவு செய்யப்பட வேண்டும் என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**5. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சினை யாதெனில், மனுதாரர் கோருகிறபடி இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.**

6.**மனுதாரர் தரப்பு வாதம் யாதெனில்,** மனுதாரர் நிறுவனமானது 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் அவர்களது சகோதரர் லேட்.கருப்பையா என்பவரின் மகன் ராமநாதன் ஆகியோருக்கு எதிராக மனு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கும் பொருட்டு மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி மனுவானது 01.12.2011 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மேற்படி உத்தரவுக்கு எதிராக திருச்செங்கோடு சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.RCA.No.1/2014 தாக்கல் செய்திருந்ததாகவும், மேற்படி மேல்முறையீடானது அனுமதிக்கப்பட்டதாகவும், RCA.No.1/2014 பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP.No.3184/2014ஐ 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் மற்றும் மேற்படி ராமநாதன் தாக்கல் செய்து மேற்படி மனுவானது சென்னை உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், மேற்படி CRP.No.3184/2014 நிலுவையில் இருந்த போது கே.ராமநாதன் எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டதால், மேற்படியாரின் வாரிசுகளான அவரது மனைவி ஆர்.கமலம் மற்றும் அவரது தாயார் கே.உண்ணாமலை ஆகியோர்கள் மனுவில் தரப்பினராக சேர்க்கப்பட்டதாகவும், மேற்படி உண்ணாமலை தனது மக்களான 1 முதல் 3 எதிர்மனுதாரர்களை விட்டு காலமாகிவிட்டதாகவும், இம்மனு மனுதாரர்கள் மனு சொத்தின் சுவாதீனத்தை வழங்கும் பொருட்டு இந்நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளதாகவும், நீதிமன்றம் உத்தரவிட்டும் கூட எதிர்மனுதாரர்கள் மனு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்கவில்லை என்றும், ஆகவே நீதிமன்ற அமீனா மூலம் மனு சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர் வசம் ஒப்படைக்குமாறு இம்மனு தாக்கல் செய்துள்ளதாக வாதிடப்பட்டது.

7.1ம்**எதிர்மனுதாரர் தரப்பு வாதம் யாதெனில்,** 1ம் எதிர்மனுதாரர் வகையறா மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் CRP.No.3184/2014ல் பிறப்பித்த 08.06.2020 தேதியிட்ட உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் சிறப்பு மேல்முறையீடு தாக்கல் செய்வதற்கு அனுமதி கோரும் மனு தாக்கல் செய்ததாகவும்,

மேற்படி மனு தாக்கல் செய்த விவரம் நன்கு தெரிந்தே அவசர கதியில் மனுதாரர் மேற்படி நிறைவேற்று மனுவை தாக்கல் செய்ததாகவும், மேற்படி நிறைவேற்று மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி நிறைவேற்று மனு நிலுவையில் இருந்த சமயம் மாண்புமிகு உச்சநீதிமன்றம் எதிர்மனுதாரரின் சிறப்பு அனுமதி கோரும் மனுவினை தள்ளுபடி செய்துள்ளதாகவும், அவ்வாறு மனு தள்ளுபடி செய்யப்பட்ட போது எதிர்மனுதாரர் வகையறா நடத்தி வரும் வியாபார நிறுவனமான ஜவுளி கடையை மனுதாரருக்கு காலி செய்து கொடுப்பதற்கு குறைந்தது 6 மாதம் முதல் 1 வருடம் வரை கால அவகாசம் வழங்கி மனு தள்ளுபடி செய்யப்பட்டால் தான் அந்த கால அவகாசத்தில் எதிர்மனுதாரர்கள் வகையறா வெளியில் கடன் கொடுத்தவரிடம் கடனை வசூல் செய்து கடையில் இருக்கக்கூடிய இருப்பு வகையறாக்களை காலி செய்து கடையை ஒப்படைக்கஇயலும் என்றும், பொதுவாகவும், நடைமுறையிலும், RCOP சம்பந்தப்பட்ட வழக்குகளில் உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றம், மேல்முறையீட்டு வழக்குகளை தள்ளுபடி செய்யும் போது குடியிருப்பு வீடாக இருந்ததால் 3 முதல் 6 மாதங்களும் வியாபார நிறுவனங்களுக்கு 6 மாதம் முதல் 1 வருடம் காலம் வரை இடத்தை காலி செய்வதற்கும் அவகாசம் அளிப்பார்கள் என இம்மனு எதிர்மனுதாரர்கள் அவரது கீழமை நீதிமன்ற வழக்கறிஞரால் அறிவுறுத்தப்பட்டதாகவும், அந்தப்படிக்கு இம்மனு எதிர்மனுதாரரும் சென்னை வழக்கறிஞரை தொடர்பு கொண்டதற்கு சென்னை வழக்கறிஞர், உச்சநீதிமன்ற வழக்கறிஞரை தொடர்பு கொண்டு SLP மனுவில் review அல்லது curative மனு தாக்கல் செய்ய கேட்டுக்கொண்டதாகவும், அந்தபடிக்கு உரிய மனு உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய இம்மனு எதிர்மனுதாரரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மேற்படி மனுவில் இம்மனு எதிர்மனுதாரருக்கு மனு சொத்தை காலி செய்ய அவகாசம் வழங்க அதிகப்படியான வாய்ப்புள்ளதாகவும், இச்சூழ்நிலையில் இந்நிறைவேற்று மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் எதிர்மனுதாரர் வகையறாவுக்கு கஷ்டம் ஏற்படும் என்றும், மனுவிற்கு உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும், உரிய தரப்பினர்கள் சேர்க்கப்படவில்லை என்றும், ஆகவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

8.**5ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதம் யாதெனில்,** HRCOP 7/2010 அசல் மனுவிலும், உத்தரவாணையிலும் மற்றும் RCA 1/2014 உத்தரவிலும், 2ம் எதிர்மனுதாரராக

சேர்க்கப்பட்டிருந்த கே.ராமநாதன் நிறைவேற்று மனுவில் (53/2022) தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றும், ஆனால் நிறைவேற்று மனுவில் 2ம் எதிர்மனுதாரராக கே.ராஜசேகர் என்பவர் சேர்க்கப்பட்டு மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனுவானது உரிய நபரை சேர்க்காத காரணத்தினால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், HRCOP 7/2010 அசல் மனுவிலும், உத்தரவாணையிலும் மற்றும் RCA 1/2014ல் ஏற்பட்ட உத்தரவினை எதிர்த்து சென்னை மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் CRP 3184/2014 சீராய்வு மனு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த போது 12.05.2019ம் தேதியன்று இறந்துவிட்டதாகவும், 08.06.2020 தேதியன்று மேற்படி சீராய்வு மனு 3184/2014 மனு தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், அதன் பிறகு மனுதாரர்கள் இந்நிறைவேற்று மனுவினை தாக்கல் செய்துள்ளதாகவும், ஆனால் நிறைவேற்று மனுவில் இறந்துபோன 2ம் எதிர்மனுதாரர் கே.ராமநாதனை தரப்பினராக காண்பிக்காமலும், அவருடைய வாரிசுகளான மனைவி கமலம் என்பவரை 4ம் எதிர்மனுதாரராகவும், தாயார் உண்ணாமலையை 5ம் எதிர்மனுதாரராகவும் காண்பித்தும், உரிமையில் நடைமுறை சட்டப்படி இறந்துபோன 2ம் எதிர்மனுதாரர் கே.ராமநாதனுக்கு வாரிசுகள் சேர்ப்பதற்கு உரிய மனு தாக்கல் செய்து நீதிமன்ற அனுமதி பெறாமல், 4, 5 எதிர்மனுதாரர்களை, தன்னிச்சையாக தரப்பினராக காண்பித்து தாக்கல் செய்துள்ள இந்நிறைவேற்று மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேலும், மனுதாரர்கள், நிறைவேற்று மனுவில் இறந்துபோன 2ம் எதிர்மனுதாரர் கே.ராமநாதனை, 2ம் எதிர்மனுதாரராக காண்பிக்காமலும் மற்றும் இறந்துவிட்டார் என்று காண்பிக்காமலும் சட்டமுறையற்ற வகையில் தாக்கல் செய்துள்ள நிறைவேற்று மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே நீக்கரவு செய்யப்பட வேண்டும் என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

9.வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும் போது, HRCOP No.7/2010 ஆனது 01.12.2011 தேதியில் வாடகை கட்டுப்பாட்டு தீர்ப்பாயம், நாமக்கல் அவர்களால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மேற்படி தீர்ப்புக்கு எதிராக வாடகை கட்டுப்பாட்டு மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் RCA.No.1/2014 ஆனது தாக்கல் செய்யப்பட்டு அதில் 13.06.2014 தேதியில் RCA.No.1/2014 ஆனது அனுமதிக்கப்பட்டும், HRCOP No.7/2010ல் 01.12.2011 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது ரத்து செய்யப்பட்டும், அம்மனு

எதிர்மனுதாரர்கள் அவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்ட 3 மாதங்களுக்குள் மனு சொத்தின் சுவாதீனத்தை எதிர்மனுதாரருக்கு ஒப்படைக்கும் பொருட்டு உத்தரவிடப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், RCA.No.1/2014ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP.No.3184/2014 ஆனது தாக்கல் செய்யப்பட்டு அது 08.06.2020 தேதியில் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. மேலும், CRP.No.3184/2014 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்ய சிறப்பு அனுமதி கோரி தாக்கல் செய்த Special leave to appeal (C) No.16529/2022 ஆனது 21.03.2023 தேதியில் தள்ளுபடி செய்து உத்தரவிடப்பட்டுள்ளதும் தெரியவருகிறது.

10.RCA.No.1/2014ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மேல்முறையீடுகளானது தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்படும் பொருண்மைகளை கருத்தில் கொள்ளும் போது, RCA.No.1/2014ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுக்கு பின்னிட்டு, மேல்முறையீடுகளும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், மனு சொத்தின் சுவாதீனமானது இம்மனு மனுதாரரிடம் ஒப்படைக்கப்பட்டதாக குறிப்பாக எவ்வித பொருண்மையும் இல்லை. மாறாக, எதிர்மனுதாரர்கள் தற்போதும், மனு சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவது அவர்களது தரப்பிலேயே ஒப்புக்கொள்ளப்படுகிறது.

11.மேலும், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் CRP.No.3184/2014 ஆனது நிலுவையில் உள்ள போது அம்மனு 2ம் மனுதாரர் ராமநாதன் என்பவர் இறந்துவிட்ட நிலையில், அவரது வாரிசுகள் மேற்படி சீராய்வு மனுவில் 5, 6 மனுதாரர்களாக CMP.No.14104/2019 in CRP.No.3184/2014ல் 09.07.2019 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேலும், அதற்கு பின்னிட்டு தாக்கல் செய்யப்பட்ட இந்நிறைவேற்று மனு குறித்த பிரமாண பத்திரிக்கையில் 2ம் எதிர்மனுதாரர் ராமநாதன் என்பவர் இறந்துவிட்டதால், மேற்படியாரின் வாரிசுகள் சீராய்வு மனுவிலேயே தரப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், ஆகவே, நிறைவேற்று மனுவை லேட்.ராமநாதனின் வாரிசுகளுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளதாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

12.மேலும், நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்படும் போது, 5ம் எதிர்மனுதாரர்

இறந்துவிட்டதாக தவறாக குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், பின்னிட்டு அவர் உயிருடன் உள்ளதாக மனுவை திருத்தம் செய்யும் பொருட்டு தாக்கல் செய்த திருத்தப்பாடு மனுவானது இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, நிறைவேற்று மனுவும் திருத்தம் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. RCA.No.1/2014ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பினை நிறைவேற்றுவதற்கு எவ்வித தடையும் இல்லை என்பது குறித்து இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் இறந்துபோன லேட்.ராமநாதன் என்பவரை இம்மனுவில் தரப்பினராக சேர்க்காததால் இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல என்று வாதிடப்பட்டது. மேற்படி லேட்.ராமநாதன் என்பவரின் வாரிசுகள் மற்றும் இதர எதிர்மனுதாரர்கள் தற்போது மனு சொத்தின் சுவாதீனத்தில் உள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக்கொள்ளப்படும் நிலையில், சுவாதீனத்தில் உள்ள நபர்களுக்கு எதிராக மட்டுமே சுவாதீனம் ஒப்படைக்க உத்தரவிட முடியும் என்பதாலும், மேற்படியாரும் இந்நிறைவேற்று மனுவில் தரப்பினராக உள்ள நிலையில், மனு சொத்தின் சுவாதீனமானது மனுதாரருக்கு ஒப்படைக்கப்படாத நிலையில், இறந்த நபரை இம்மனுவில் சேர்க்காத காரணத்தினால் இந்நிறைவேற்று மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கும் வாதமானது ஏற்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13.மேலும், RCA.No.1/2014 in HRCOP No.7/2010ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில், மேற்படி தீர்ப்பினை நிறைவேற்றுவதற்கு எவ்வித தடையும் இல்லாத நிலையில், இம்மனு எதிர்மனுதாரர்கள் மனு சொத்தின் சுவாதீனத்தை ஒப்படைக்க கடமைப்பட்டவர்கள் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து, இம்மனுவை அனுமதிப்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. ஆகவே, மனு சொத்தின் சுவாதீனத்தை நீதிமன்ற அமீனா மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**முடிவாக,**

நீதிமன்ற அமீனா மனு சொத்தின் சுவாதீனத்தை மனுதாரர்கள் வசம் ஒப்படைக்க இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது. படி கட்ட கால அவகாசம் 1 வாரம். அழைக்க வாய்தா

14.03.2025.

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் மீண்டும் பிழை திருத்தங்கள் செய்யப்பட்டு இன்று 2024ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 14ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

/ஒப்பம்/திருமதி M.பிரவீணா.
கூடுதல் மாவட்டஉரிமையியில் நீதிபதி,
நாமக்கல்

உபயமனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் : இல்லை.

/ஒப்பம்/திருமதி M.பிரவீணா.
கூடுதல் மாவட்டஉரிமையியில் நீதிபதி,
நாமக்கல்